Namma Kalvi

# 9

# குடிமையியல்

www.nammakalvi.in





# பாடம் 1 அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி

## பயிற்சிகள்

### I. சரியான விடையினைத் தேர்வு செய்க :

1. ஒரு நபரோ, அரசரோ அல்லது அரசியோ ஆட்சி செய்யும் முறை
   அ) தனி நபராட்சி ஆ) முடியாட்சி இ) மக்களாட்சி ஈ) குடியரசு [விடை: ஆ]

2. முழு அதிகாரத்துடன் கொண்ட ஒரு நபர் அரசாங்க முறை
   அ) சிறுகுழு ஆட்சி ஆ) மதகுருமார்களின் ஆட்சி
   இ) மக்களாட்சி ஈ) தனிநபராட்சி [விடை: ஈ]

3. முன்னாள் சோவியத் யூனியன் ________ க்கு எடுத்துக்காட்டு.
   அ) உயர்குடியாட்சி ஆ) மதகுருமார்களின் ஆட்சி
   இ) சிறுகுழு ஆட்சி ஈ) குடியரசு [விடை: இ]

4. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
   இ) பிரான்ஸ் ஈ) வாட்டிகன் [விடை: ஈ]

5. ஆபிரகாம் லிங்கன் ________ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.
   அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
   இ) சோவியத் ரஷ்யா ஈ) இந்தியா [விடை: அ]

6. குடவோலை முறையை பின்பற்றியவர்கள்
   அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள்
   இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள் [விடை: இ]

7. பழங்காலத்தில் நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டப் பகுதி
   அ) பண்டைய இந்தியாவின் குடியரசுகள் ஆ) அமெரிக்கா
   இ) பண்டைய ஏதன்ஸ் நகர அரசுகள் ஈ) பிரிட்டன் [விடை: இ]

8. எந்த மொழியிலிருந்து "டெமாகிரஸி" என்ற வார்த்தைப் பெறப்பட்டது?
   அ) கிரேக்கம் ஆ) லத்தீன் இ) பாரசீகம் ஈ) அரபு [விடை: அ]

**9. மக்களாட்சியில் இறுதி அதிகாரம் பெற்றவர்கள்**

அ) நாடாளுமன்றம் ஆ) மக்கள்
இ) அமைச்சர் அவை ஈ) குடியரசு தலைவர் **[விடை: ஆ]**

**10. கீழ்க்கண்ட எந்த ஒரு நாடானது அதிபர் அரசாங்க முறையினைக் கொண்டுள்ளது?**

அ) இந்தியா ஆ) பிரிட்டன்
இ) கனடா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் **[விடை: ஈ]**

**11. உலகிலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடு**

அ) கனடா ஆ) இந்தியா
இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) சீனா **[விடை: ஆ]**

**12. கூற்று (A)** : நேரடி மக்களாட்சி சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ளது.

**காரணம் (R)** : மக்கள் நேரடியாக முடிவெடுப்பதில் பங்கு பெறுகிறார்கள்

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: அ]**

**13. கூற்று (A)** : இந்தியாவில் நாடாளுமன்ற அரசாங்க முறை பின்பற்றப்படுகிறது.

**காரணம் (R)** : இந்திய நாடாளுமன்றம் இரு சபைகளை உள்ளடக்கியது.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: ஆ]**

**14. வாக்குரிமையின் பொருள்:**

அ) தேர்ந்தெடுப்பதற்கான உரிமை ஆ) ஏழைகளுக்கு வாக்களிக்கும் உரிமை
இ) வாக்களிக்கும் உரிமை ஈ) பணக்காரர்களுக்கு வாக்களிக்க உரிமை **[விடை: இ]**

**15. அனைவருக்கும் வாக்குரிமை வழங்குவது**

அ) சமூகச் சமத்துவம் ஆ) பொருளாதார சமத்துவம்
இ) அரசியல சமத்துவம் ஈ) சட்ட சமத்துவம் **[விடை: அ]**

**16. பிரதமரை நியமிப்பவர்/ நியமிப்பது**

அ) மக்களவை ஆ) மாநிலங்களவை
இ) சபாநாயகர் ஈ) குடியரசுத் தலைவர் **[விடை: ஈ]**

**17. குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர்கள்**

அ) லோக்சபைக்கு 12 உறுப்பினர்கள் ஆ) ராஜ்ய சபைக்கு 2 உறுப்பினர்கள்
இ) ராஜ்ய சபைக்கு 12 உறுப்பினர்கள் ஈ) ராஜ்ய சபைக்கு 14 உறுப்பினர்கள்

**[விடை: இ]**

**18. இந்தியாவில் சுதந்திரத்திற்கு பிறகு முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு**

அ) 1948-49 ஆ) 1951-52 இ) 1957-58 ஈ) 1947-48 **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு ________. **விடை: 1950**
2. இரண்டு வகையான மக்களாட்சி ________ மற்றும் ________ ஆகும். **விடை: நேரடி, மறைமுக**
3. நேரடி மக்களாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு ________ **விடை: சுவிட்சர்லாந்து**
4. இந்தியா ________ மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும். **விடை: மறைமுக**
5. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ________ ஆவார். **விடை: ஜவஹர்லால் நேரு**
6. ஆங்கலேயர் ஆட்சிக் காலத்தில் முதல் பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டு ________. **விடை: 1920**
7. இந்தியாவில் நாடாளுமன்ற கட்டிடத்தை வடிவமைத்தவர்கள் ________ மற்றும் ________ ஆவர். **விடை: எட்வின் லுட்டியன்ஸ், ஹெர்பர்ட் பேக்கர்**

## III. பொருத்துக. (விடையுடன்) :


| | | |
|---|---|---|
| 1. தனிநபராட்சி | – | வடகொரியா |
| 2. வாக்குரிமை | – | 18 |
| 3. சாணக்கியர் | – | அர்த்தசாஸ்திரம் |
| 4. மதகுருமார்கள் ஆட்சி | – | வாடிகன் |

## IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி :

**1. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.**

மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சி 'மக்களாட்சி' என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் வரையறை கூறினார்.

**2. மக்களாட்சி அரசாங்க அமைப்பினை பற்றி கூறுக.**




**3. நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சியினை வேறுபடுத்துக.**

| நேரடி மக்களாட்சி | மறைமுக மக்களாட்சி |
|---|---|
| பொது விவகாரங்களில் மக்களே நேரடியாக முடிவெடுக்கக்கூடிய அரசு முறையே நேரடி மக்களாட்சி என்கிறோம்.<br>**எ.கா:** பண்டைய கிரேக்க நகர அரசுகள், சுவிட்சர்லாந்து. | பொது விவகாரங்களில் மக்கள் தங்களது விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் வெளிப்படுத்தும் அரசாங்கத்தின் வகையே மறைமுக மக்களாட்சி என்று அழைக்கப்படுகிறது.<br>**எ.கா:** இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள். |

## V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி :

**1. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை? விவரி.**

இந்தியாவில் மக்களாட்சி எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்

- கல்வியறிவின்மை
- வறுமை
- பாலினப் பாகுபாடு
- பிராந்தியவாதம்
- சாதி, வகுப்பு, சமய வாதங்கள்
- ஊழல்
- அரசியல் குற்றமயமாதல்
- அரசியல் வன்முறை

**2. இந்தியாவில் மக்களாட்சி வெற்றிகரமாகச் செயல்படத் தேவையான நிலைமைகளை விளக்குக.**

இந்தியாவில் மக்களாட்சி வெற்றிகரமாகச் செயல்படத் தேவையான நிலைமைகள்:

- ஏழைகள் மற்றும் எழுத்தறிவற்றோருக்கு மக்களாட்சியின் பலன்களைக் கிடைக்கச் செய்ய அதிகாரம் அளித்தல்.
- தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிகள் தமது அதிகாரத்தையும், பொதுசொத்துக்களையும் தவறாகப் பயன்படுத்தாமல் இருத்தல்.

- மக்களாட்சி முறையைப் பீடித்திருக்கும் சமூக தீமைகளையும், சமூகக் கொடுமைகளையும் ஒழித்தல்.
- மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கப் பாரபட்சமற்ற திறமை மிக்க ஊடகங்களின் தேவையை உணர்தல்.
- பொது மக்களின் கருத்து வலுவாக இருத்தல்.
- மக்களிடையே சகிப்புத்தன்மையும், மத நல்லிணக்கமும் நிலவுதல்.
- அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மக்களிடம் ஏற்படுத்துதல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
- வலுவான பொறுப்புமிக்க எதிர்க்கட்சி இருத்தல்.

**3. இந்தியாவில் மக்களாட்சிப் பற்றிய உங்களது கருத்து என்ன?**

- சமத்துவம், சுதந்திரம், சமூக நீதி, பொறுப்புணர்வு மற்றும் அனைவருக்கும் மதிப்பளித்துல் போன்ற அடிப்படை மக்களாட்சிப் பண்புகளை, மக்கள் மனதில் கொண்டு செயல்படும் போது, மக்களாட்சி மேலும் துடிப்பானதாகவும், வெற்றிகரமானதாகவும் இருக்கும்.
- மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள், மற்றும் நடத்தைகள் ஆகியவை மக்களாட்சியின் தலையாய கொள்கைகளுடன் பொருத்திச் செயல்பட வேண்டும்.
- எனவே, மக்களாட்சியின் இலக்குகளை நடைமுறைபடுத்த மக்களே தங்களை முன்மாதிரியாக பங்கெடுத்துக் கொள்ளவும், கடமையுணர்வோடு செயல்படவும், தங்களுக்குள் பொறுப்புணர்வை உருவாக்கவும், தமக்களிக்கப்பட்ட வாய்ப்புகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும்.

## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள் :

**1. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன என்பதை வகுப்பறையில் கலந்துரையாடு.**

18 வயது நிரம்பிய ஒவ்வொரு இந்திய குடிமகனும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர் என்பதே வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை எனப்படும். அதன் முக்கியத்துவத்தை மாணவர்களுடன் கலந்துரையாடுக.

**உதாரணமாக:**

- வாக்களிப்பது நமது கடமை.
- நம் உரிமையை யாருக்கும் விட்டுக் கொடுக்க கூடாது.
- இளைஞர்கள் நாட்டின் தூண்கள், அவர்களது ஓட்டு அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**2. மக்களாட்சி என்பது "சிறுபான்மையினரை மதிக்கும் பெரும்பான்மையினரின் ஆட்சி" - கலந்துரையாடு.**

குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடலாம். பின்னர் குழுக்கள் தங்களின் கருத்துக்களை தொகுத்து வழங்கலாம்.

www.nammakalvi.in





**3. உங்கள் வகுப்பறையில் மாதிரி தேர்தலை நடத்துக.**

உங்கள் ஆசிரியரின் உதவியுடன் வகுப்பறையை தேர்தல் நடத்தும் இடமாக மாற்றலாம். மாதிரி தேர்தல் இயந்திரம், மை, போன்றவைகளை பயன்படுத்துக.

**குழுக்கள்:**

- தேர்தலில் போட்டியிடுபவர்கள்
- தேர்தல் நடத்தும் அதிகாரிகள்
- தேர்தலில் ஓட்டு இடுபவர்கள்
- தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் குழு.

**4. இந்தியாவில் மக்களாட்சியின் நிறை, குறைகளைப் பற்றி வகுப்பறையில் குழு விவாதம் செய்க.**

**மக்களாட்சி:**

ஒரு நாட்டின் தகுதியுள்ள குடிமக்களால் வாக்களிக்கப்பட்ட தனிநபரோ அல்லது குழுவாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும் அரசாங்கமே "மக்களாட்சி" எனப்படும். மக்களாட்சி எனும் சொல் டெமோஸ் மற்றும் கிரேடியா எனும் இரு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். டெமாகிரஸி என்றால் மக்கள் அதிகாரம் என்று பொருள்.

மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார்.

**மக்களாட்சியின் நிறைகள்:**

- பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசாங்கம்
- சமத்துவமும் சகோதரத்துவமும்
- மக்களிடையே பொறுப்புணர்ச்சி
- தல சுய ஆட்சி
- அனைவருக்கும் வளர்ச்சியும் வளமும்
- மக்கள் இறையாண்மை
- சகோதர மனப்பான்மை மற்றும் கூட்டுறவு

**மக்களாட்சியின் குறைகள்:**

- மறைமுக அல்லது பிரதிநிதித்துவ முறை கொண்ட மக்களாட்சி
- வாக்காளர்களிடையே போதிய ஆர்வமின்டை மற்றும் குறைந்த வாக்குப்பதிவு
- சில சமயங்களில் நிலையற்ற அரசாங்கத்திற்கு வழி வகுக்கிறது.
- முடிவெடுக்கும் முறையில் காலதாமதம்.

## VII. சிந்தனை வினா :

**1. சர்வாதிகாரத்தின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறதா? அத்தகைய நாட்டில் பொதுமக்கள் கருத்து பற்றி என்ன அணுகுமுறை இருக்கும்?**

- ✦ சர்வாதிகாரத்தின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை இருக்காது.
- ✦ பொதுமக்கள் சர்வாதிகாரியின் விருப்பப்படியே வாழ இயலும், பேச்சுரிமை, எழுத்துரிமை இருக்காது.

**2. குடிமக்களின் அமைதியான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மக்களாட்சி எவ்வாறு வழிவகுக்கிறது? விளக்குக.**

மக்களாட்சியின், சிறப்புகள், நிறைகளை எழுதுக.

## VIII. வாழ்வியல் திறன் :

குறிப்பிட்ட நாடுகளை தேர்வு செய். ஒவ்வொரு நாட்டையும் ஆராய்ந்து அந்நாட்டின் அரசாங்கம்-உயர்குடியாட்சி, முடியாட்சி, தனிநபராட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்கள் ஆட்சி, மக்களாட்சி, குடியரசு - இவற்றில் எந்த வகையைச் சார்ந்தது என்பதைக் கூறவும்: பின்னர் அரசாங்க வகைகளைத் தீர்மானிக்க உதவும் பண்புகளை விவரி.

| | நாட்டின் பெயர் | அரசாங்கத்தின் வகை | அரசாங்க வகைகளைத் தீர்மானிக்க உதவும் பண்புகள் |
|---|---|---|---|
| 1. | இந்தியா | மக்களாட்சி | பொதுத் தேர்தல். |
| 2. | வாட்டிகன் | மதகுருமார்கள் ஆட்சி | 'போப்' - ன் கீழ் அரசு இயங்குகிறது. |
| 3. | இங்கிலாந்து | உயர்குடி ஆட்சி | மக்கள் பிரதிநிதிகளுடன் அரச குடும்பத்தின் முடிவுகளும் முக்கியமானதாக உள்ளது. |
| 4. | கத்தார் | முடியாட்சி | அரசனின் கட்டுப்பாட்டில் உள்ளது. |
| 5. | சீனா | சிறு குழு ஆட்சி | கம்யூனிசத்தை கடைபிடிக்கும் தேர்ந்தெடுக்கப் பட்ட சிறு குழு ஆட்சி முடிவுகளை எடுக்கும். |

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

**1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் பின்பற்றக்கூடிய அரசாங்க முறை**

அ) மக்களாட்சி ஆ) முடியாட்சி
இ) தனியார் ஆட்சி ஈ) சிறு குழு ஆட்சி [விடை: அ]

2. **கீழ்கண்டவைகளில் முடியாட்சி முறை உள்ள நாடு**
அ) இந்தியா ஆ) இலங்கை
இ) பூடான் ஈ) பாக்கிஸ்தான் **[விடை: இ]**

3. **லோக் சபா என்பது**
அ) மாநில சட்ட மன்றம் ஆ) தேர்தல் ஆணையம்
இ) மேலவை/மாநிலங்களவை ஈ) கீழவை/மக்களவை **[விடை: ஈ]**

4. **இந்தியாவில் ________ ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.**
அ) 5 ஆ) 6 இ) 4 ஈ) 10 **[விடை: அ]**

5. **அன்னிய அதிகாரத்தின் கட்டுப்பாடோ, இடையூறோ இல்லாமல் இருப்பதை ______ என்கிறோம்.**
அ) குடியரசு ஆ) இறையாண்மை இ) சமத்துவம் ஈ) சுதந்திரம் **[விடை: ஆ]**

6. **கூற்று (A)** : மக்களாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் மட்டுமே ஆட்சி செய்ய முடியும்.
**காரணம் (R) :** தலைவர்கள் மக்களின் விருப்பப்படி மட்டுமே ஆட்சிசெய்வார்கள், மக்களை தங்கள் அமைப்பை விட்டு நீங்காமல் பார்த்துக் கொள்வார்கள்.
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது. **[விடை: இ]**

7. **கூற்று (A)** : தற்கால உலகில் மக்களாட்சி அரசாங்கமே மேலாதிக்கம் செலுத்தும் வடிவமாக இருக்கிறது.
**காரணம் (R) :** மக்களாட்சியானது இதுவரை கடுமையான சவாலையோ, அல்லது போட்டியோ எதிர்கொள்ளவில்லை.
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது. **[விடை: அ]**

## II. பொருத்துக (விடையுடன்) :

1.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓமன், கத்தார் | - | முடியாட்சி |
| 2. | இங்கிலாந்து, ஸ்பெயின் | - | உயர் குடியாட்சி |
| 3. | வடகொரியா, சவுதி அரேபியா | - | தனி நபர் ஆட்சி |
| 4. | சீனா, வெனிசுலா | - | சிறு குழு ஆட்சி |
| 5. | இந்தியா, பிரான்ஸ் | - | மக்களாட்சி |

2.
1. நடுவண் அரசு - நாடாளுமன்றம்
2. மாநில அரசு - சட்டமன்றம்
3. உள்ளாட்சி அமைப்புகள் - ஊராட்சி, நகராட்சி
4. பொது தேர்தல் - இந்திய தேர்தல் ஆணையம்
5. நேரடி மக்களாட்சி - சுவிட்சர்லாந்து

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. முன்னாள் சோவியத் யூனியனில் பின்பற்றப்பட்ட அரசாங்க முறை ________.

**விடை: சிறு குழு ஆட்சி**

2. குடியரசு (ரெஸ் பப்லிகா) என்னும் சொல்லுக்கு பொருள் ________ என்பதாகும்.1

**விடை: பொது விவகாரம்**

3. மக்களாட்சி அல்லது டெமாகிரஸி என்றால் ________ என்று பொருள் ஆகும்.

**விடை: மக்கள் அதிகாரம்**

4. தமிழ்நாட்டில் சோழர்களின் காலத்தில் இருந்த தேர்தல் முறை ________ ஆகும்.

**விடை: குடவோலை முறை**

5. மக்களின் விருப்பங்கள் அவர்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் மூலம் நிறைவேற்றப்படுவது ________ என்று அழைக்கப்படுகிறது.

**விடை: மறைமுக மக்களாட்சி**

## IV. சுருக்கமான விடையளி :

**1. மக்களாட்சி குறிப்பு வரைக.**

ஒரு நாட்டின் தகுதியுள்ள மக்களால் வாக்களிக்கப்பட்ட தனிநபரோ அல்லது குழுவாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும் அரசாங்கமே "மக்களாட்சி" எனப்படும். எ.கா: இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ்.

**2. குடியரசு விளக்கம் தருக.**

மக்களிடம் அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடமும் உயரிய அதிகாரம் இருக்கின்ற அரசாங்க முறையே "குடியரசு" எனப்படும். இவ்வகை அரசாங்கத்தில் ஒரு முடிமன்னரை காட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட (அ) நியமிக்கப்பட்ட குடியரசு தலைவர் இருப்பார். எ.கா: இந்தியா, ஆஸ்திரேலியா.

**3. இந்திய ஜனநாயகத்தின் முக்கிய கொள்கைகள் யாவை?**

இந்திய ஜனநாயகத்தின் முக்கிய கொள்கைகள் இறையாண்மை, சமதர்மம், மதசார்பின்மை, மக்களாட்சி மற்றும் குடியரசு.

**4. நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?**

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொது தேர்தல்கள் மூலம் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேலும் இரு ஆங்கிலோ இந்தியர்களைக் குடியரசுத் தலைவர் மக்களவைக்கு நியமனம் செய்கிறார்.

**5. மாநிலங்களவை உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?**

நாடாளுமன்றத்தின் மேலவையான மக்களவை உறுப்பினர்கள் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், மேலும் கலை இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறப்பாகச் சேவை புரிந்த 12 பேரை மாநிலங்கள் அவைக்கு குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

## V. விரிவான விடையளி :

**1. மக்களாட்சி என்றால் என்ன? அதன் நிறை, குறைகளைக் கூறுக.**

**மக்களாட்சி:**

ஒரு நாட்டின் தகுதியுள்ள குடிமக்களால் வாக்களிக்கப்பட்ட தனிநபரோ அல்லது குழுவாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும் அரசாங்கமே "மக்களாட்சி" எனப்படும். மக்களாட்சி எனும் சொல் டெமோஸ் மற்றும் கிரேடியா எனும் இரு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். டெமாகிரஸி என்றால் மக்கள் அதிகாரம் என்று பொருள்.

மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார்.

**மக்களாட்சியின் நிறைகள்:**

- பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசாங்கம்
- சமத்துவமும் சகோதரத்துவமும்
- மக்களிடையே பொறுப்புணர்ச்சி
- தல சுய ஆட்சி
- அனைவருக்கும் வளர்ச்சியும் வளமும்
- மக்கள் இறையாண்மை
- சகோதர மனப்பான்மை மற்றும் கூட்டுறவு

**மக்களாட்சியின் குறைகள்:**

- மறைமுக அல்லது பிரதிநிதித்துவ முறை கொண்ட மக்களாட்சி
- வாக்காளர்களிடையே போதிய ஆர்வமின்டை மற்றும் குறைந்த வாக்குப்பதிவு
- சில சமயங்களில் நிலையற்ற அரசாங்கத்திற்கு வழி வகுக்கிறது.
- முடிவெடுக்கும் முறையில் காலதாமதம்.

# பாடம் 2 தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

## பயிற்சிகள்

### I. சரியான விடையினைத் தேர்வு செய்க :

1. **கீழ்க்கண்ட நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.**
   அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
   இ) கனடா ஈ) ரஷ்யா **[விடை: ஆ]**

2. **இந்திய தேர்தல் ஆணையம் ஒரு**
   அ) சுதந்திரமான அமைப்பு ஆ) சட்டபூர்வமான அமைப்பு
   இ) தனியார் அமைப்பு ஈ) பொது நிறுவனம் **[விடை: அ]**

3. **இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு**
   அ) பிரிவு 280 ஆ) பிரிவு 315 இ) பிரிவு 324 ஈ) பிரிவு 325 **[விடை: இ]**

4. **இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி தேர்தல் ஆணையத்தைப் பற்றி கூறுகிறது?**
   அ) பகுதி III ஆ) பகுதி XV இ) பகுதி XX ஈ) பகுதி XXII **[விடை: ஆ]**

5. **பல்வேறு அரசியல் கட்சிகளைத் தேசியக் கட்சியாகவோ அல்லது மாநிலக் கட்சியாகவோ அங்கீகரிப்பவர்/ அங்கீகரிப்பது.**
   அ) குடியரசுத் தலைவர்
   ஆ) தேர்தல் ஆணையம்
   இ) நாடாளுமன்றம்
   ஈ) தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் **[விடை: ஆ]**

6. **கூற்று (A)** : இந்திய அரசியலமைப்புச் சுதந்திரமாக செயல்படும் தேர்தல் ஆணையத்திற்கு வழிவகைச் செய்கிறது.
   **காரணம் (R)**: இது நாட்டின் சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்த உறுதி செய்கிறது.
   அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
   ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
   இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
   ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: அ]**

www.nammakalvi.in





7. **நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு**
அ) 2012 ஆ) 2013 இ) 2014 ஈ) 2015 **[விடை: இ]**

8. **அழுத்தக் குழுக்கள் எனும் சொல்லினை உருவாக்கிய நாடு**
அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
இ) முன்னாள் சோவியத் யூனியன் ஈ) இந்தியா **[விடை: அ]**

9. **கூற்று** (A) : இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக்குழுக்கள் காணப்படுகின்றன.
**காரணம்** (R) : அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதை போல இந்தியாவில் அழுத்தக்குழுக்கள் வளர்ச்சியடையவில்லை.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது **[விடை: அ]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. இந்திய தேர்தல் ஆணையம் ________ உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. **விடை: 3**
2. தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள் ________. **விடை: ஜனவரி 25**
3. இந்தியாவில் ________ கட்சி முறை பின்பற்றப்படுகிறது. **விடை: பல**
4. 2017ல் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகளின் எண்ணிக்கை ________. **விடை: 7**
5. நர்மதா பச்சோவா அந்தோலன் என்பது ஒரு ________. **விடை: அழுத்தக்குழு**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசியக் கட்சி | – | ஏழு |
| 2. | ஒரு கட்சி ஆட்சி முறை | – | சீனா |
| 3. | இரு கட்சி ஆட்சி முறை | – | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 4. | அழுத்தக் குழுக்கள் | – | வணிகக் குழுக்கள் |

## IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி :

1. **இந்தியாவிலுள்ள தேர்தல் முறைப் பற்றி விவரி.**

✦ இந்திய தேர்தல் முறை, இங்கிலாந்தில் பின்பற்றப்படும் தேர்தல் முறையினைப் பின்பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✦ தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்துகின்றது. தேர்தல் ஆணையம் ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களை உள்ளடக்கியது.

✦ தேர்தல் ஆணையம் நாட்டில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை பாராளுமன்றத்திற்கும், சட்டசபைகளுக்கும் நடத்துகின்றது.

2. **அரசியல் கட்சி என்பதன் பொருளை விளக்குக.**

✦ ஓர் அரசியல் கட்சி என்பது அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நிகழ்ச்சி நிரல்களையும், குறிப்பிட்டக் கொள்கைகளையும் கொண்ட மக்கள் குழுவின் அமைப்பாகும்.

✦ தலைவர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் எனும் மூன்று அங்கங்களை ஓர் அரசியல்கட்சி பெற்றுள்ளது.

3. **இரு கட்சி ஆட்சி முறை மற்றும் பல கட்சி ஆட்சி முறையினை வேறுபடுத்துக.**

| இரு கட்சி ஆட்சி முறை | பல கட்சி ஆட்சி முறை |
|---|---|
| தேர்தலில் இரு முக்கிய கட்சிகள் மட்டுமே பங்கு பெறும்.<br>**எ.கா:** அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து | தேர்தலில் இரண்டிற்கு மேற்பட்ட ஆட்சிகள் பங்கு பெறும்.<br>**எ.கா:** இந்தியா, இலங்கை, பிரான்ஸ், இத்தாலி. |

4. **அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?**

✦ அழுத்தக் குழுக்கள் என்ற சொல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உருவாக்கப்பட்டது. பொது நலன்களைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழு என்று அழைக்கப்படுகிறது.

✦ அரசு மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரும்படி நெருக்கடி தருவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

## V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி :

1. **நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.**

**நேரடித் தேர்தல்:**

தங்கள் பிரதிநிதிகளை வாக்காளர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கும் முறை நேரடித் தேர்தல் எனப்படும்.

**நிறைகள்:**

✦ வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகளை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதால், வலுவான மக்களாட்சி கொண்டதாகக் கருதப்படுகிறது.

✦ அரசாங்க நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வு, தகுதியான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க மக்கள் கற்கின்றனர்.

✦ மக்களைத் தீவிரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுகிறது.

**குறைகள்:**

✦ நேரடித் தேர்தல் முறை அதிக செலவு கொண்டதாக உள்ளது.

- எழுத்தறிவற்ற வாக்காளர்கள், சில நேரங்களில் சாதி, மதம் பிற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் பொய்யான பிரச்சாரங்களினால் தவறாக வழிநடத்தப்படுகின்றனர்.
- ஒவ்வொரு வாக்கு மையங்களிலும் சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையை உறுதி செய்வது தேர்தல் ஆணையத்திற்கு மிக பெரும் சவாலாக உள்ளது.
- சில அரசியல் கட்சி வேட்பாளர்கள் பணம், பொருள், பணிகள் மூலமாக தங்களது செல்வாக்கை வாக்காளர்கள் மீது செலுத்துகின்றனர்.
- தேர்தல் நேரங்களில் வன்முறைகள், பதற்றங்கள், சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது.

**2. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை?**

**அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்:**

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. பெரும்பாலான மக்களாட்சி நாடுகளில் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் இடையே தான் கடும் போட்டிகள் நிலவுகின்றன.
- கட்சிகள் தங்களைத் தேர்ந்தெடுக்க அவர்களது கொள்கைகளையும், திட்டங்களையும் தேர்தல் தொகுதிகளில் முன்னிறுத்துகின்றனர்.
- முறையான சட்டங்கள் நாடாளுமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.
- அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினை அமைத்து, அவற்றை வழி நடத்துகின்றனர்.
- தேர்தலில் தோல்வியடைந்த கட்சிகள் எதிர்கட்சியாகப் பங்களிப்பு செய்கின்றன. இவை அரசின் குறைகள் மற்றும் தவறான கொள்கைகளை எதிர்த்து விமர்சனம் செய்கின்றன.
- மக்களின் கருத்திற்கு அரசியல் கட்சிகள் வடிவம் கொடுக்கின்றன. மேலும் அவை முக்கிய நிகழ்வுகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.
- அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன.

**3. இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள் யாவை?**

**அரசியல் பங்கேற்பு:**

மனுக்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் மூலம் மக்களின் ஆதரவைத் திரட்டி தங்கள் செல்வாக்கினை விரிவுபடுத்துகின்றன.

**கல்வி:**

பல அழுத்தக் குழுக்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது, இணையதளம் பராமரிப்பு, அரசு கொள்கைகள் மீது கருத்துக்கள் வெளியிடுவது மற்றும் கல்வியாளர்கள், அறிவியலாளர்கள், முக்கிய பிரபலங்களிடமிருந்து கருத்துக்களைத் திரட்டி வல்லுனர்களின் ஆதரவைப் பெறுவது ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன.

**கொள்கை உருவாக்கம்:**

அரசுக்கு தகவல் அளிப்பது, ஆலோசனைகள் வழங்குவது மூலம் அரசின் கொள்கை உருவாக்க பணிகளில் அழுத்தக் குழுக்கள் உதவுகின்றன.

## VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள் :

1. **தேசியக் கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சாதனைகளை ஒப்பிடுக.**

| | கட்சியின் பெயர் | அந்தஸ்து | கொள்கைகள் | திட்டங்கள் | சாதனைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | B.J.P (பாரதிய ஜனதா) | தேசிய கட்சி | | | |
| 2. | காங்கிரஸ் | தேசிய கட்சி | | | |
| 3. | A.D.M.K (அ.தி.மு.க.) | மாநில கட்சி | | | |
| 4. | D.M.K (தி.மு.க.) | மாநில கட்சி | | | |

இக்கட்சிகளின் கொள்கைகள், திட்டங்கள், சாதனைகளை ஆசிரியர், பெற்றோர், நண்பர்கள் உதவியுடன் அறிந்து கொள்க.

## VII. சிந்தனை வினா :

1. **தேர்தல்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் முக்கியத்துவமாகக் கருதப்படுகின்றது. ஏன்?**

கீழ் கண்ட தலைப்புகளைக் கொண்டு சிந்திக்கவும்.

- மக்களாட்சி
- பிரதிநிதிகள் யார்? அவர்களது பணிகள்.
- பிரதிநிதிகளுக்கும் மக்களுக்குமிடையேயான உறவு
- நல்ல பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

2. **வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் முக்கியத்துவம் என்ன?**

இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

3. **மக்களாட்சியின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.**

**நிறைகள் :**

பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசு, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம், மக்களிடம் பொறுப்புணர்ச்சி, தல சுய ஆட்சி, அனைவருக்குமான வளர்ச்சி மற்றும் வளம், மக்கள் இறையாண்மை, சகோதர மனப்பான்மை மற்றும் கூட்டுறவு

**குறைகள் :**

மறைமுக அல்லது பிரதிநிதித்துவ முறை கொண்ட மக்களாட்சி, வாக்காளர்களிடையே போதிய ஆர்வமின்மை மற்றும் குறைந்த வாக்குபதிவு, சில சமயங்களில் நிலையற்ற அரசாங்கத்திற்கு வழிவகுக்கிறது.

**4. பல கட்சி ஆட்சி முறையினை விவாதி.**

இந்தியாவில் உள்ள கட்சிகளில் உமக்குத் தெரிந்தவற்றைப் பட்டியலிடுக. இதில் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த கட்சிகளின் சாதனைகளை விவாதிக்கலாம். வெற்றி பெறாத சிறு கட்சிகள் தேர்தல் நேரத்தில் எவ்வாறு பெரிய கட்சியுடன் கூட்டு சேர்ந்து அரசியலில் பங்காற்றுகின்றன என்பதைப் போன்ற கருத்துக்களை விவாதிக்கலாம்.

## VIII. வாழ்வியல் திறன் :

**1. உங்களுடைய வகுப்பறையில் மாதிரி வாக்குப் பதிவை நடத்துக.**

குழுக்களாகப் பிரிந்து உங்களுடைய வகுப்பில் மாதிரி வாக்குப் பதிவை நடத்திக் காட்டலாம்.

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

**1. தேசிய அளவில் அரசாங்கத்தின் தலைவர்**

அ) குடியரசுத் தலைவர் ஆ) இராணுவ அமைச்சர்
இ) சட்ட அமைச்சர் ஈ) பிரதமர் **[விடை: ஈ]**

**2. இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு வாக்காளர் சரிபார்க்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு**

அ) 2010 ஆ) 2014 இ) 2015 ஈ) 2018 **[விடை: ஆ]**

**3. இங்கிலாந்தில் ______ முறை நடைமுறையில் உள்ளது.**

அ) இரு கட்சி ஆ) ஒரு கட்சி
இ) பல கட்சி ஈ) இவற்றுள் ஏதுவுமில்லை **[விடை: அ]**

**4. அரசுக்கும் மக்களுக்குமிடையே பாலமாக செயல்படுவது**

அ) கலைத் துறை ஆ) காவல் துறை
இ) அரசியல் கட்சிகள் ஈ) தேர்தல் ஆணையம் **[விடை: இ]**

5. **கூற்று** (A) : மக்களாட்சியில் எதிர்கட்சித் தலைவர் முதலமைச்சருக்கு பிறகு அதிகாரம் மிக்க தலைவராக கருதப்படுகிறார்.

**காரணம்** (R) : பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனுக்காகச் செலவிடப்படும் பொதுப் பணத்தை ஆய்வு செய்கிறார்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது. **[விடை: ஈ]**

6. **கூற்று** (A) : பொது நலன்களைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் அழுத்தக் குழுக்கள் தீவிரமாக செயல்படுகின்றன.

**காரணம்** (R) : அரசு மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரும்படி அவை நெருக்கடி தருகின்றன.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) வை விளக்கவில்லை.
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது. **[விடை: அ]**

## II. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | VVPAT | - | மின்னணு வாக்குப்பதிவு வாக்காளர் சரிபார்க்கும் கருவி |
| 2. | NOTA நோட்டா | - | 2014 |
| 3. | குடியிரசுத் தலைவர் | - | மறைமுகத் தேர்தல் |
| 4. | பலகட்சி முறை | - | இந்தியா, இலங்கை, இத்தாலி |
| 5. | மாநிலக் கட்சி | - | பிராந்தியக் கட்சிகள் |

## III. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. பிரதமர் பாராளுமன்றத்தில் ________ மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
**விடை: கீழவை (லோக்சபா)**
2. மறைமுகத் தேர்தல்கள் நடத்த செலவு ________. **விடை: குறைவனாதாகும்**
3. இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் ________ உறுப்பினர்கள் வாக்களிக்க இயலாது.
**விடை: நியமன**
4. கியூபாவில் ________ நடைமுறையில் உள்ளது. **விடை: ஒரு கட்சி முறை**
5. ________ அரசின் குறைகள் மற்றும் தவறான கொள்கைகளை எதிர்த்து பல்வேறுபட்ட பார்வைகளை முன்வைக்கின்றன. **விடை: எதிர்கட்சி**
6. அழுத்தக் குழுக்கள் ________ என்றும் அழைக்கப்படுகின்றன. **விடை: நலக்குழுக்கள்**
7. மக்களாட்சி முறையில் எதிர்கட்சித் தலைவர் ________ தகுதி பெற்றவராவார்.
**விடை: கேபினட் அமைச்சர்**

## IV. சுருக்கமான விடையளி :

**1. இந்திய குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

இந்திய குடியரசுத் தலைவர் கீழ்கண்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

- பாராளுமன்றத்தில் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்
- இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்

**2. அழுத்தக் குழுக்களின் வகைகளில் சிலவற்றைக் கூறுக.**

- ✦ வணிகக் குழுக்கள்
- ✦ தொழிற் சங்கங்கள்
- ✦ விவசாயக் குழுக்கள்
- ✦ மாணவர் அமைப்புகள்
- ✦ மத அமைப்புகள்
- ✦ பழங்குடி அமைப்புகள்
- ✦ சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுக்கள்

**3. அழுத்தக் குழுக்களுக்கான எடுத்துக்காட்டுகள் சிலவற்றைக் கூறுக.**

- ✦ அகில இந்திய தொழிற்சங்க காஸ்கிரஸ் (AITUC)
- ✦ அகில இந்திய விவசாயிகள் சங்கம் (AIKS)
- ✦ இந்திய மருத்துவச் சங்கம் (IMA)
- ✦ அகில இந்திய மாணவர் சம்மேளனம் (AISF)
- ✦ தமிழ்ச் சங்கம்
- ✦ நர்மதா பச்சாவோ அந்தோலன்

**4. நோட்டா (NOTA) பற்றி குறிப்பிடுக.**

ஒரு மக்களாட்சி நடைபெறும் நாட்டில் உள்ள வாக்காளர்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரையும் தேர்வு செய்ய விருப்பம் இல்லை எனில், வாக்காளர்கள் "(மேற்கண்ட எவரும் இல்லை)" (NOTA - none of the above) எனும் பொத்தானை வாக்கு இயந்திரத்தில் தேர்வு செய்யலாம். 2014 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முதல் முறையாக NOTA அறிமுகமானது.

**5. தேசியக் கட்சிகள் குறிப்பு வரைக.**

ஒரு கட்சி குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது மாநிலக் கட்சி என்ற தகுதியைப் பெற்றிருக்குமானால் அது தேசியக் கட்சி என்ற தகுதியைப் பெறுகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6 சதவீதம் வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசியகட்சிகள் ஆகும்.

## V. விரிவான விடையளி :

**1. மக்களாட்சியில் எதிர்கட்சியின் பங்கை விளக்குக.**

- ✦ மக்களாட்சியில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்றக் கட்சி ஆளும் கட்சியாகவும் எஞ்சிய மக்களின் ஆதரவு பெற்ற கட்சி எதிர் கட்சியாகவும் இருக்கும்.
- ✦ ஆளும் கட்சி எவ்வாறு முக்கியமானதாகக் கருதப்படுகிறதோ அதுபோல எதிர்கட்சிகளின் பங்கும் முக்கியமானதாகும்.

- மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்களிலும் எதிர்கட்சித் தலைவர் முக்கிய பங்கை வகிக்கிறார்.
- எதிர்கட்சித் தலைவர் கேபினட் அமைச்சர் தகுதியைப் பெறுகிறார்.
- இவர் பொது நடவடிக்கைகளைப் பாதிக்கும் ஆளும் கட்சியின் தவறான கொள்கைகளை எதிர்க்கிறார்.
- பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு, மக்கள் நலனுக்காகச் செலவிடப்படும் பொதுப்பணத்தை ஆய்வு செய்கிறார்.
- அவர் மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறார்.
- சட்ட மன்றத்திற்கு வெளியே ஆளும் கட்சியின் கொள்கைகள், செயல்பாடுகளை விமர்சம் செய்கிறார். எனவே ஆளும் கட்சியினர் தவறாக அதிகாரங்களைப் பயன்படுத்த இவர் தடையாக உள்ளார்.

குடிமையியல்

# பாடம் 3 மனித உரிமைகள்

## பயிற்சிகள்

### I. சரியான விடையை தேர்ந்தெடு :

**1. இன ஒதுக்கல் என்னும் கொள்கையைப் பின் பற்றிய நாடு ________ .**

அ) தென் சூடான் ஆ) தென் ஆப்பிரிக்கா

இ) நைஜீரியா ஈ) எகிப்த் **[விடை: ஆ]**

**2. ஒரு அரசாங்கத்தின் உருவாக்கம் மற்றும் நிர்வாகத்தில் பங்கு பெறுவது ________.**

அ) சமூக ஆ) பொருளாதார இ) அரசியல் ஈ) பண்பாடு **[விடை: இ]**

**3. ஒரு 10 வயது பையன் கடையில் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். எந்த உரிமையைப் பயன்படுத்தி அவனை மீட்பாய்?**

அ) சமத்துவ உரிமை

ஆ) சுதந்திர உரிமை

இ) குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை

ஈ) சமய சுதந்திர உரிமை **[விடை: இ]**

**4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு ________ .**

அ) 20 நாட்கள் ஆ) 25 நாட்கள்

இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள் **[விடை: இ]**

**5. பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?**

i) மாநில மனித உரிமை ஆணையம் 1993ல் நிறுவப்பட்டது.

ii) இது ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

iii) இதன் அதிகாரம் மாநில எல்லையைக் கடந்தும் செயல்படும்.

iv) இது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரைக்கலாம்

அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (i) மற்றும் (iii) சரி

இ) (i), (ii) மற்றும் (iii) ஈ) (i), (ii) மற்றும் (iv) **[விடை: ஈ]**

6. **கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி :**

**கூற்று (A)** : உரிமைகளும் கடமைகளும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

**காரணம் (R)** : நாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை உண்டு. பிற மதத்தினர் இடையே இனக்கமான உறவை ஏற்படுத்துவதுடன் அவர்களின் உணர்வையும் மதிக்க வேண்டும்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம்.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

இ) (A) சரி ஆனால் (R) தவறு

ஈ) (A) தவறு ஆனால் (R) சரி **[விடை: அ]**

7. **ஐ.நா சபையின் படி _________ வயது நிறைவு பெறாதோர் குழந்தை ஆவார்.**

அ) 12 ஆ) 14 இ) 16 ஈ) 18 **[விடை : ஈ]**

8. **_________ கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டுள்ளது.**

அ) இலக்கியம் ஆ) அமைதி

இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம் **[விடை: ஆ]**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. உலகளாவிய மனித உரிமை பேரறிக்கைப் பிரகடணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு ______.
**விடை: 1948 டிசம்பர்**

2. அடிப்படைக் கடமைகள் இந்திய அரசமைப்பு சட்டத்தின் ________ சட்ட திருத்தத்தின் படி சேர்க்கப்பட்டுள்ளது. **விடை: 42**

3. தேசிய மனித உரிமை ஆணையம் ________ ஆண்டு அமைக்கப்பட்டது. **விடை: 1993**

4. பெண்களுக்கான மூதாதையர் சொத்துரிமை சட்டத்தை 1989ல் நடைமுறைப்படுத்திய இந்திய மாநிலம் ________ . **விடை: தமிழ்நாடு**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | வாக்களிக்கும் உரிமை | - | அரசியல் உரிமை |
| 2. | சங்கம் அமைக்கும் உரிமை | - | சுதந்திர உரிமை |
| 3. | பாரம்பரியத்தை பாதுகாக்கும் உரிமை | - | பண்பாட்டு உரிமை |
| 4. | இந்து வாரிசுரிமைச் சட்டம் | - | 2005 |
| 5. | குழந்தை தொழிலாளர் | - | சுரண்டலுக்கெதிரான உரிமை |

## IV. சுருக்கமான விடையளி :

**1. மனித உரிமை என்றால் என்ன?**

இன, பாலின, தேசிய, இனக்குழு, மொழி, மதம் அல்லது வேறு தகுதி அடிப்படையைப் பொறுத்து மாறுபடாமல் மனிதர்களாகப் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இரக்கும் உரிமையே மனித உரிமை ஆகும்.

**2. அடிப்படை உரிமைகள் யாவை?**

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- சுரண்டலுக்கு எதிரான உரிமை
- சமய மற்றும் மனச்சான்று சுதந்திரத்திற்கான உரிமை
- சிறுபான்மையினருக்கான பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்
- அரசமைப்புச் சட்ட வழி தீர்வுகளுக்கான உரிமை

ஆகியவை அடிப்படை உரிமைகள் ஆகும்.

**3. குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா சபை அறிவித்துள்ளவை யாவை?**

- வாழ்வதற்கான உரிமை
- குடும்பச் சூழலுக்கான உரிமை
- கல்விக்கான உரிமை
- சமூகப் பாதுகாப்பு உரிமை
- பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை
- விற்பது அல்லது கடத்துதலுக்கு எதிரான உரிமை
- குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கு எதிரான உரிமை

**4. அரசியலமைப்புத் தீர்வு வழிகளுக்கான உரிமைப்பற்றி சிறு குறிப்பு வரைக.**

- ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில் அரசமைப்புத் தீர்வு வழிகளுக்கான உரிமையின் படி அவர் நீதி மன்றத்தை அணுகலாம்.
- நீதிமன்றம் அக்குடிமகனுக்குரிய உரிமையை மீட்டளிக்குமாறு அரசுக்கு ஆணையிடுகிறது.
- ஒரு செயல் அரசமைப்பு சட்டத்தின் படி தவறாக கருதப்படின் அதற்கான சரியான தீர்வுகளை அரசமைப்புச் சட்ட தீர்வாணைகள் வழங்குகின்றன.

**5. போக்சா (POCSO) – வரையறு.**

- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்.
- இது ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுகிறது.

**6. குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் தேவைப்படுவது ஏன்?**

குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன் கொடுமைக்கு ஆளாகும். குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் தேவைப்படுகிறது.

**7. பெண் தொழிலாளர் நலனுக்காக பி.ஆர் அம்பேத்காரின் பங்களிப்புகள் யாவை?**

- தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு
- தொழிற்சங்கங்களில் கட்டாய அங்கீகாரம்
- இந்தியாவில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்.
- தொழிலாளர் காப்பிட்டுக் கழகம்
- தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம்
- நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கலா வைப்பு நிதி.

**8. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆனால் பெண்களுக்கான தனிச்சட்டம் நடைமுறை படுத்தப்படுகிறது நியாயப்படுத்துக.**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆனால் பெண்களுக்கான தனிச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஏன் எனில் பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை, வரதட்சணை கொடுமை மற்றும் போதிய பாதுகாப்பின்மை போன்ற காரணங்களால் தனிச்சட்டம் நடைமுறை படுத்தப்படுகிறது.

**9. டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் தொழிலாளர் நலனுக்கு அளித்த பங்களிப்பை பற்றி ஏதேனும் இரண்டு கூறுக.**

- தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு.
- தொழிற்சங்கங்கள் கட்டாய அங்கீகாரம்.

**10. வேறுபடுத்துக: மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள்.**

| மனித உரிமைகள் | அடிப்படை உரிமைகள் |
|---|---|
| 1) மனிதன் தன் மானத்தோடும், சுதந்திரத்தோடும் வாழுகின்ற உரிமைகள் இவை. | அரசியல் அமைப்பில் காணப்படும் குடிமக்களின் ஆதார உரிமைகள், அடிப்படை உரிமைகள் எனப்படும். இவை சட்டத்தின் மூலம் நடை முறைபடுத்தலாம். |
| 2) மனிதனின் வாழ்வில் அடிப்படை தேவை களால் உரிமைகள் இதில் அடங்கியுள்ளன. இவற்றைப் பறிக்க இயலாது. | மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள உரிமைகளும், அடிப்படை உரிமைகளில் அடங்கும் |
| 3) மனித உரிமைகள் பன்னாடு அளவில் அங்கிகரிக்கப்பட்டவை. | அடிப்படை உரிமைகள் நமது நாட்டின் அரசமைப்பு சட்டத்தின் மூலம் உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. |

## V. விரிவான விடையளி :

**1. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் பற்றி ஒரு பத்தியில் விடை தருக.**

- வெவ்வேறு சட்ட மற்றும் பன்னாட்டுப் பின்னணியுடன் உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து, கலந்துக் கொண்டிபிரதிநிதகளால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.
- 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பாரிசில் நடைப்பெற்ற ஐ.நா பொது சபையில் நிறைவேற்றப்பட்ட அந்த பேரறிக்கை அனைத்துலக நாடுகள் மற்றும் அனைத்துலக மக்களின் பொதுதர சாதனை ஆகும்.
- இது பல்வேறு மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டது.
- இதில் 30 உறுப்புகள் உள்ளன. இது சுதந்திரத்திற்கான உரிமையை உறுதிச் செய்வதோடு குடிமை, அரசியல், சமூக பொருளாதார மற்றும் பண்பாடு உரிமைகளையும் தருகிறது. இவ்வுரிமைகள் இனம், பால், தேசியம் ஆகியவற்றை கடந்து, அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.
- இதில் இடம்பெற்றுள்ள பெரும்பான்மையான உத்திரவாதங்கள் இக்காலத்தில் தரம் மிக்க விதிமுறைகளாக நிலை பெற்று விளங்குகின்றன.

**2. அடிப்படை கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?**

அடிப்படைக் கடமைகள் என்பவை குடிமக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ற விதத்தில் அமைந்துள்ளன. எனது பள்ளி வளாகத்தில்,

- சட்டத்தினை மதிப்பதுடன், தேசிய கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றை மதிக்க வேண்டும்.
- பள்ளியினுள் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை பேணி பாதுகாக்க வேண்டும்.
- தேவை ஏற்படின், நாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபட மாணவர்களை ஊக்கபடுத்த வேண்டும்.
- சமய, மொழி, இன பிரிவுகளை கடந்து பள்ளி வளாகத்தினுள் அனைவரும் சகோதரத்துவத்துடன் இணக்கமாக இருக்கப் பாடுபட வேண்டும்.
- அறிவியல் உணர்வு, மனித நேயம் பகுத்தறிவு மற்றும் சீர்திருத்த உணர்வை வளர்க்க வேண்டும்.
- காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் விலங்கினங்கள் ஆகியவை புறச்சூழலை பாதுகாத்து மாணவர்கள் உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும்.

**3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது?**

- தேசிய மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் அமைக்கப்பட்டது. இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

- இவ்வமைப்பு ஒரு தலைவரையும் சில உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்திய அரசமைப்புச்சட்டம் மற்றும் சர்வதேச உடன்படிக்கையின் படி உத்திரவாதம் தரப்பட்டுள்ள ஒரு தனி மனிதனின் வாழ்வு, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் பொறுப் பேற்கிறது.

**பணிகள் :**

- மனித உரிமை மீறல் குறித்து அரசு ஊழியர் அலட்சியம் காட்டுதல் ஆகியவை மீது விசாரனை நடத்துதல்.
- மனித உரிமை மீறல் வழக்குகளில் தன்னை இணைத்துக் கொள்ளுதல்.
- மனித உரிமைகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஊக்குவித்தல்.
- சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே மனித உரிமைக் கல்வியை பரப்புதல்.
- மனித உரிமைத்துறையில் பணியாற்றும் அரசுசாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் முயற்ச்சிகளை ஊக்குவித்தல்.

**4. தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை?**

தொழிலாளர் சட்டத்தின் மூலம் சமத்துவத்திற்கான உரிமை, பொது வேலை வாய்ப்பில் சமத்துவம், அமைப்புகள் மற்றும் சங்கங்கள் தொடங்குவதற்கான உரிமை, வாழ்வாதார உரிமை, கடத்தலைத் தடுத்தல் மற்றும் கட்டாயத் தொழிலாளர் மற்றும் குழந்தை உரிமைகளை, இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கிறது. பிரிவு 39பி, இருபாலினரும் சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது.

**தொழிலாளர் நலனில் டாக்டர் பி.ஆர் அம்பேத்கரின் பங்களிப்புகள் :**

- தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு.
- தொழிற்சங்கங்களில் கட்டாய அங்கீகாரம்.
- இந்தியாவில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்.
- தொழிலாளர் காப்பீட்டு கழகம் (ESI).
- தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம்.
- நிலக்கரி மற்றும் மைக்கா சுரங்கத்தில் வருங்கால வைப்பு நிதி.

பேன்றவை தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் பெறும் நன்மைகள் ஆகும்.

**5. அடிப்படை உரிமைகளை எவ்வாறெல்லாம் உன் வாழ்க்கையில் அனுபவிக்கிறாய்?**

ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும். இதன் மூலம் என் வாழ்வில்

- பேசும் உரிமை
- விரும்பிய இடத்தில் வாழும் உரிமை போன்றவை அனுபவிக்கிறேன். மேலும்,

**சமத்துவ உரிமை :**

சட்டத்தின் முன் அனைவரும் சம பாதுகாப்பு சமத்துவ உரிமை மூலம் கிடைக்கிறது. அது கிடைக்க பெறாத போது நீதிமன்றத்தினை அணுகலாம்.

**சுதந்திர உரிமை :**

ஆறுவகையான சுதந்திரங்கள் நமது அரசியல் அமைப்பு சட்டத்தில் நாம் அனுபவிக்கிறோம்.

- பேச்சுரிமை
- ஆயுதமின்றி கூடும் உரிமை
- சங்கங்கள் அமைக்கும் உரிமை
- இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை
- இந்தியா முழுவதும் சுதந்திரமான நடமாடும் உரிமை.
- எந்த தொழிலையும், வணிகத்தையும் செய்யும் உரிமை.

**சுரண்டலுக்கெதிரான உரிமை :**

14 வயதிற்கு குறைந்த குழந்தைகளை அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்துவது குற்றம்.

**சமய சுதந்திரம் மற்றும் பகுத்தறிவுக்கான உரிமை :**

குடிமக்கள் தங்கள் விரும்பிய சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் உரிமை அளிக்கிறது. மேலும் மனசாட்சி படி வாழ்வதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

**பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் :**

அரசமைப்பு கூட்டம் பண்பாட்டினைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் உரிமை வழங்கியுள்ளது. கல்விக் கூடம் அமைக்கவும், சமய சார்பு கல்வி அழிக்க மத நிறுவனங்களை நிறுவலாம்.

**அரசமைப்பு தீர்வுக்கான உரிமை :**

ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கபடுகையில் அரசமைப்பு தீர்வுக்கான உரிமையின் படி நீதி மன்றத்தினை அணுகலாம். இவ்வுரிமை அனைத்து உரிமைகளுக்கும் பாதுகாப்பாகவும் காவலாகவும் அமைகின்றது போன்ற உரிமைகளின் மூலம் அடிப்படை உரிமைகளை என் வாழ்வில் அனுபவிக்கிறேன்.

## VI. செயல்பாடு :

**1. பாலியல் ரீதியான துன்புறுத்தல், சுரண்டல் மற்றும் கடத்தல்களில் இருந்து நீ எவ்வாறு உன்னைப் பாதுகாத்துக் கொள்வாய்.**

நான் என் நெருங்கிய நண்பர் அல்லது பெற்றோருக்கு எந்த தடங்கலும் இல்லாமல் என் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த வேண்டும். அவசர தொடர்பு எண்கள் பெற்றோர்கள், குடும்ப நண்பர்கள் அல்லது போலீஸ் நபர்கள் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை நான் அறிவேன்.

**2. ‘‘என் நாடு என் உரிமைகள்’’ என்ற தலைப்பில் கட்டுரை வரைக.**

மாணவர் சுய செயல்பாடு

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. __________ ம் ஆண்டு ஐ.நா சபை தொடங்கப்பட்டது. **விடை: 1945**
2. நெல்சன் மண்டேலா ________ என்னும் கொள்கைக்கு எதிராக தொடர்ச்சியாக போராடினார். **விடை: இன ஒதுக்கல்**
3. __________ வகையான சுதந்திரங்கள் நமது அரசமைப்புச் சட்டத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. **விடை: ஆறு**
4. மூத்த குடிமக்களுக்கான சட்டம் ________ ம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது. **விடை: 2007**
5. ஐ.நா சபை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று __________ உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. **விடை: குழந்தைகள்**
6. __________ பிரிவில் 14 நிறைவடையும் வரை இலவச மற்றும் கட்டாய கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும். **விடை: 45**
7. தமிழ் நாட்டில் திருநங்கையர்கள் __________ பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். **விடை: மிகவும் பிற்படுத்தப்பட்டவர்**
8. இந்திய மக்கள் தொகையில் __________ சதவீதம் பழங்குடி மக்கள் உள்ளனர். **விடை: 8.6**
9. __________ சட்டம் இந்தியாவில் 2005 அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது. **விடை: தகவல் அறியும் உரிமைச் சட்டம்**
10. __________ பிரிவு இருபாலினருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது. **விடை : 39பி**

### II. வினாவிற்கு விடையளி :

**1. 6 வகை சுதந்திர உரிமைகள் யாவை?**

- பேச்சுரிமை
- ஆயுதமின்றி கூடும் உரிமை
- சங்கங்கள் அமைக்கும் உரிமை
- இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை
- இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாடும் உரிமை
- எந்த தொழிலையும் வணிகத்தையும் செய்யும் உரிமை

**2. கல்வி உரிமைகள் - குறிப்பு வரைக.**

கல்வி நிலையங்களை அமைக்க ஊக்குவிக்கிறது. சமய சார்பு கல்வி அளிக்க மக்கள் மத நிறுவனங்களை நிறுவலாம். அரசு அதற்கு மானியம் அளிக்கிறது. இருப்பினும் சாதி, நிற,

இனம் அல்லது சமய வேறுபாட்டினைக் காரணம் கூறி யாருக்கும் இவ்வகை நிறுவனங்களில் அனுமதி மறுத்தல் கூடாது.

**3. சமூகப் பாதுகாப்பு உரிமை பற்றி கூறுக.**

உடல் நலமின்மை, இயலாமை அல்லது வயது முதிர்வு காரணமாக பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால் குழந்தைகளுக்குத் தரமான வாழ்வைத் தர இயலாத சூழ்நிலையில் அக்குழந்தைக்கு அரசு நிதி உதவி அளிக்க வேண்டும். இவையே சமூகப் பாதுகாப்பு உரிமையாகும்.

**4. பாஸ்கோ சட்டத்தின் சிறப்பு அம்சங்கள் இரண்டு கூறுக.**

- பாலியல் வன்கொடுமையில் அதிகாரத்தில் இருப்பவரோ, குடும்ப உறுப்பினரோ, அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமானவரோ ஈடுபட்டால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை வாங்கப்படும்.
- பாதிக்கப்பட்ட குழந்தையை அடிக்கடி சாட்சி சொல்ல அழைக்கக் கூடாது.

**5. தகவல் அறியும உரிமைச் சட்டத்திலிருந்து யாருக்கெல்லாம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.**

நாட்டின் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைக்கான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) மத்திய சேமக்காவல் படை (RPR) மற்றும் உளவுத்துறை பணியகம் (Intelligence Bureau) ஆகிய அமைப்புகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

❖❁❁❁❖

குடிமையியல்

# பாடம் 4 அரசாங்கங்களின் வகைகள்

## பயிற்சிகள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ________, ________ ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.

விடை: இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இலங்கை

2. பாராளுமன்ற ஆட்சிமுறை ________ என்றும் அழைக்கப்படுகின்றது.

விடை: அமைச்சரவை அரசாங்கம் | பொறுப்பு அரசாங்கம் | வெஸ்ட் மினிஸ்டர்

3. பராளுமன்ற ஆட்சி முறையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் ________ ஆவார்.

விடை: பிரதமர்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

| எண் | நாடுகள் | நாடாளுமன்றத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | அமெரிக்க ஐக்கிய நாடு | ________ |
| 2. | நார்வே | ________ |
| 3. | ________ | ஃபோக்டிங் |

விடை: 1. காங்கிரஸ் 2. ஸ்டார்டிங் 3. டென்மார்க்

### III. வேறுபடுத்துக :

1. ஒற்றையாட்சி முறை – கூட்டாட்சி முறை.

| ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| 1. ஒரேயொரு அரசு. | 1. இரட்டை நிலை அரசு. |
| 2. பெரும்பாலும் ஒரே குடியுரிமை. | 2. இரட்டை குடியுரிமை. |
| 3. துணைக் குழுக்கள் தன்னிச்சையாக செயல்பட முடியாது. | 3. குழுக்கள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டவை. |
| 4. அதிகாரப் பகிர்வு இல்லை. | 4. அதிகாரப் பகிர்வு உண்டு. |
| 5. மையப்படுத்தப்பட்ட அதிகாரம். | 5. அதிகாரப் பரவல். |

**2. நாடாளுமன்ற ஆட்சி அதிபர் மக்களாட்சி முறை – முறை.**

| நாடாளுமன்ற ஆட்சி முறை | அதிபர் மக்களாட்சி முறை |
|---|---|
| 1. பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதமர் ஆவார். எ.கா. பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா | 1. குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். எ.கா. அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை. |
| 2, மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது. | 2, அதிபரே அதிகாரம் படைத்தவர். |
| 3. அரசின் தலைவர் குடியரசுத் தலைவர். | 3. மாகாணத்தின் தலைவர் அதிபர். |
| 4. அரசாங்கத்தின் தலைவர் பிரதமர். | 4. அரசாங்கத்தின் தலைவரும் அதிபரே. |
| 5. கூட்டுத் தலைமை. | 5. தனிநபர் தலைமை. |
| 6. கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள் உண்டு. | 6. மகாசபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பு ஏற்கமாட்டார். |

## IV. சுருக்கமாக விடையளி :

**1. ஒற்றையாட்சி முறை**

- ✦ ஒற்றை ஆட்சிமுறை என்பது இறையான்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும்.
- ✦ மத்திய அரசு அதிகாரம் மிக்கதாகும்.
- ✦ நிர்வாக அமைப்புகள் மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே செயல்படுத்தும்.

  எ.கா: இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், இலங்கை.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி :

**1. அரசமைப்பின் வகைகளைப் பட்டியலிடுக.**

- ✦ எழுதப்பட்ட / எழுதப்படாத அரசமைப்பு.
- ✦ கூட்டாட்சி / ஒற்றையாட்சி அரசமைப்பு.
- ✦ நெகிழும் தன்மையுடைய / நெகிழும் தன்மையற்ற அரசமைப்பு ஆகும்.

**2. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை?**

- ✦ உள்ளூர் சுய ஆட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல்.
- ✦ மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப் பகிர்வு, நிர்வாகத் திறன்கள் மேம்பட வழிவகுக்கிறது.
- ✦ மிகப்பெரிய நாடுகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது.
- ✦ மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கு தடுக்கப்படுகிறது.
- ✦ பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு முன்னேற்றம் ஏற்பட பெரிதும் வழி செய்கிறது.

3. ஒற்றையாட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| 1. ஒரேயொரு அரசு அல்லது துணைக்குழுக்கள். எ.கா. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், இலங்கை | 1. இரண்டு நிலை அரசு. எ.கா. அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து, பிரேசில், அர்ஜென்டினா, இந்தியா |
| 2. பெரும்பாலும் ஒரே குடியுரிமை. | 2. இரட்டைக் குடியுரிமை. |
| 3. துணைக் குழுக்கள் தன்னிச்சையாக செயல்பட இயலாது. | 3. கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை. |
| 4. அதிகாரப் பகிர்வு இல்லை. | 4. அதிகாரப் பகிர்வு உண்டு. |
| 5. மையப்படுத்தப்பட்ட அதிகாரம். | 5. அதிகாரப் பரவல் உண்டு. |

## IV. விரிவான விடையளி.

1. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.

**நிறைகள்:**

- ✦ சிறு நாடுகளுக்குப் பொருத்தமானது.
- ✦ அதிகாரம் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் மோதல்கள் இருப்பதில்லை.
- ✦ இம்முறை உடனடியாக முடிவெடுத்துத் துரிதமாகச் செயல்படுகிறது.
- ✦ குறைந்த செலவுடையது.
- ✦ அரசியலமைப்பு திருத்தங்களை எளிதில் மேற்கொள்ள இயலும்.
- ✦ ஒற்றுமை, சீரான சட்டம், கொள்கை மற்றும் நிர்வாகத்தினை உள்ளடக்கியது.

2. அதிபர் மக்கள் ஆட்சி முறை பற்றிக் குறிப்பு வரைக. மேலும் அதிபர் மக்களாட்சி முறைக்கும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

- ✦ அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்டமன்றத்திற்கு பொறுப்பில்லாததாகவும், நாடாளுமன்றம் அற்றதாகவும், நிலைத்த நிர்வாகம் அற்றதாகவும், நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும்.
- ✦ இம்முறை அதிகாரப் பகிர்வு கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ✦ அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை.

| அதிபர் மக்களாட்சி முறை | நாடாளுமன்ற மக்களாட்சி முறை |
|---|---|
| 1. குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். | 1. பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதமர் ஆவார். |
| 2. அதிபர் அதிகாரம் படைத்தவர். | 2. மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது. |

| | |
|---|---|
| 3. மாகாணத்தின் தலைவர் அதிபர். | 3. அரசின் தலைவர் குடியரசுத் தலைவர். |
| 4. அரசாங்கத்தின் தலைவரும் அதிபரே. | 4. அரசாங்கத்தின் தலைவர் பிரதமர். |
| 5. தனி நபர் தலைமை. | 5. கூட்டுத் தலைமை. |
| 6. மகா சபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பு ஏற்க மாட்டார். | 6. தனித்தனியான பொறுப்புகள் உண்டு. |

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. மிகவும் பழமையான அரசாங்கம் ______ காணப்பட்ட ________ அமைப்பு ஆகும்.
   விடை: ஐக்கியப் பேரரசில், முடியாட்சி.
2. அரசு என்னும் பதம், பழைய பிரெஞ்சு வார்த்தையான ______ என்பதிலிருந்து பெறப்பட்டது.
   விடை: கவர்னர்.
3. இயக்கு, ஆட்சிசெய், வழி நடத்து, ஆள் என்று பொருள் தரும் லத்தீன் வார்த்தை ______.
   விடை: குபர்னர்.
4. ஒற்றையாட்சி நடைபெறும் நாடு ______. விடை: இங்கிலாந்து.
5. அரசின் முக்கிய உறுப்புகள் ______, ______, ______, ஆகிய மூன்றாகும்.
   விடை: சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை.
6. இந்தியாவில் ______ அரசு அமைப்பு நடைபெறுகிறது. விடை: கூட்டாட்சி முறை.
7. நவீன மக்களாட்சி முறை ______, ______, என இரு வகைப்படும்.
   விடை: நாடாளுமன்ற ஆட்சி முறை, அதிபர் மக்களாட்சி முறை.
8. மத்தியப் பட்டியலில் ______ துறைகள் உள்ளன. விடை: 100.
9. மாநிலப் பட்டியலில் ______ துறைகள் உள்ளன. விடை: 61.
10. பொதுப் பட்டியலில் ______ துறைகள் உள்ளன. விடை: 52.

### II பொருத்துக (விடையுடன்) :

1. இஸ்ரேல் – கெனஸ்ட்
2. ஜெர்மனி – பந்தெஸ்டாக்
3. நேபாளம் – ஞானேந்திரா
4. பூடான் – ஜிக்மே சிங்கியே
5. மொத்த தேசிய மகிழ்ச்சி – ஜூலை 18, 2008

## III. குறுகிய விடையளி :

**1. ஒற்றையாட்சி முறையின் குறைகளை விவரி.**

- மிகப்பெரிய நாடுகளுக்கு ஏற்றதல்ல.
- நிர்வாக தாமதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- மத்திய அரசு உள்ளூர் பிரச்சனை, உள்ளூர் மக்கள் நலன், முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறை காட்டுவது கடினம்.
- சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும்.

**2. கூட்டாட்சி முறையின் குறைகள் யாவை?**

- பலவீனமான முறை.
- செலவு அதிகம்.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்படும்.
- அதிகாரப் பகிர்வில் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே முரண்பாடு ஏற்படும்.
- பிராந்திய போக்குகள்தான் காணப்படும்.

**3. இந்திய அரசியலமைப்பில் காணப்படும் கூட்டாட்சி முறை அம்சங்கள் யாவை?**

- இரட்டை அரசாங்கம்
- எழுதப்பட்ட அரசியலமைப்பு
- அதிகாரப் பகிர்வு
- அரசியல் அமைப்பின் உயர் அதிகாரம்
- நெகிழும் தன்மையற்ற அரசியல் அமைப்பு
- சுதந்திரமான நீதித்துறை
- இரண்டு அவை ஆட்சி

**4. நாடாளுமன்ற ஆட்சி முறையின் அம்சங்கள் யாவை?**

- பெயரளவில் மற்றும் உண்மையான நிர்வாகிகள்.
- பெரும்பான்மை கட்சி ஆட்சி
- கூட்டுப் பொறுப்புணர்வு
- இரட்டை உறுப்பினர்
- பிரதம மந்திரியின் தலைமை

**5. நாடாளுமன்ற ஆட்சி முறையின் நிறைகள் யாவை?**

- சட்ட மன்றம் மற்றும் நிர்வாகத் துறைக்கு இடையிலான இணக்கம்
- பொறுப்பான அரசாங்கம்
- சர்வாதிகாரத்தைத் தடுக்கிறது
- பரவலான பிரதிநிதித்துவம்

**6. நாடாளுமன்ற ஆட்சி முறையின் குறைகள் யாவை?**

- ✦ நிலையற்ற அரசாங்கம்
- ✦ தொடர்ச்சியற்ற கொள்கைகள்
- ✦ அமைச்சரவையின் சர்வாதிகாரம்
- ✦ அதிகாரங்களையுப் பிரிப்பதில் உள்ள சிக்கல்கள்

**7. நல் ஆட்சியின் பண்புகள் யாவை?**

- ✦ பங்கேற்பு
- ✦ சட்டத்தின் ஆட்சி
- ✦ வெளிப்படைத் தன்மை
- ✦ விரைவான நேர்மையான வினையாற்றல்
- ✦ கருத்தொற்றுமை
- ✦ சமத்துவம்
- ✦ பொறுப்புடைமை
- ✦ திறமை மற்றும் செயல்திறன்

**8. நல்ல அரசு என்றால் என்ன? ஆட்சி என்றால் என்ன?**

நல்ல அரசு என்பது பொது விவகாரங்களையும் பொது வளங்களையும், பொது நிறுவனங்கள் பயன்படுத்தும் விதத்தை குறிக்கும் தனித்துவமிக்க ஒரு சொல் ஆகும். ஆட்சி என்பது முடிவுகள் எடுக்கும் செயல்முறை மற்றும் முடிவுகளைச் செயல்படுத்தும் முறைகளை குறிப்பதாகும்.

**9. மொத்த தேசிய மகிழ்ச்சி – குறிப்பு வரைக.**

- ✦ இக்கருத்து பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம் பெற்று ஜூலை 18, 2008ல் நடைமுறைப்படுத்தப் பட்டது.
- ✦ மொத்த தேசிய மகிழ்ச்சி என்றும் பதத்தைப் பூட்டான் நான்காம் அரசர் ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் 1970 இல் உருவாக்கப்பட்டது.
- ✦ மொத்த தேசிய மகிழ்ச்சி நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு, பண்பாடு மற்றும் நல்ல ஆட்சி ஆகியவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது.
- ✦ இயற்கை மற்றும் பாரம்பரிய மதிப்புகளுக்கிடையே இசைவை வலியுறுத்தும் வகையில் மக்களிடையே கூட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அரசின் இலக்காக இருக்க வேண்டும்.

பாடம் 5

# உள்ளாட்சி அமைப்புகள்

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

**1. 1985 ஆம் ஆண்டு திட்டக்குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?**

அ) பல்வந்ராய் மேத்தா குழு ஆ) அசோக் மேத்தா குழு
இ) G.V.K. ராவ் மேத்தா குழு ஈ) L.K. சிங்வி மேத்தாகு [விடை: இ]

**2. ________ காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்பு பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது?**

அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர் [விடை: அ]

**3. 73 மற்றும் 74 ஆவது அரசமைப்புத் திருத்த சட்டங்கள் எந்த ஆண்டில் நடைமுறைக்கு வந்தன?**

அ) 1992 ஆ) 1995 இ) 1997 ஈ) 1990 [விடை: அ]

**4. யார் ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகிறார்?**

அ) ஆணையர் ஆ) மாவட்ட ஆட்சியர்
இ) பகுதி உறுப்பினர் ஈ) மாநகரத் தலைவர் [விடை: ஆ]

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை என அழைக்கப்படுபவர் ________. **விடை: ரிப்பன் பிரபு.**
2. நமது விடுதலைப் போராட்டத்தின் போது மறு சீரமைப்பு என்பது ________ ஆக விளங்கியது. விடை: பஞ்சாயத்து.
3. சோழர் காலத்தின் போது கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த இரகசிய தேர்தல் முறை ________ என்றழைக்கப்பட்டது. **விடை: குடவோலை முறை.**
4. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு ________ ஆகும். **விடை: கிராம ஊராட்சி.**
5. பேரூராட்சி நிர்வாகத்தினைக் கண்காணிப்பவர் ________ ஆவார். **விடை: செயல் அலுவலர்.**

## III. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஊராட்சி | – | மாவட்ட ஆட்சியர் |
| 2. | கிராம சபைகள் | – | கிராமங்கள் |
| 3. | பகுதி குழுக்கள் | – | நகராட்சிகள் |
| 4. | ஊராட்சி ஒன்றியம் | – | பெருந்தலைவர் |
| 5. | மாநகராட்சி | – | மாநகரத் தலைவர் |

## IV. தவறுகளைக் கண்டறிந்து பிழை திருத்தி எழுதவும் :

**1. ஊராட்சி ஒன்றியம் பல மாவட்டங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.**
ஊராட்சி ஒன்றியம் பல கிராமங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.

**2. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது.**
ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது.

**3. நகராட்சி ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.**
மாநகராட்சி ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.

**4. ஊராட்சிகளில், ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.**
ஆம், சரியான கூற்று.

## V. சுருக்கமான விடையளி :

**1. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?**

- சொத்து வரி
- தொழில் வரி
- வீட்டு வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நிலவரி
- கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

**2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?**

- மூன்று அடுக்கு அமைப்பு.
- கிராம சபை.
- தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல்.
- நிதி ஆணையத்திணை நிறுவுதல்.
- மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு வழங்குதல்.
- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு.
- மாவட்ட திட்டக்குழு அமைத்தல்.

**3. கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?**

- குடிநீர் வழங்குதல்.
- தெரு விளக்குகளைப் பராமரித்தல்.
- சாலைகளைப் பராமரித்தல்.
- சந்தைகள் மற்றும் திருவிழாக்களை நடத்துதல்.
- மரம் நடுதல்.
- சிறிய பாலங்கள், கிராம நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை பராமதித்தல்.
- தொகுப்பு வீடுகளைக் கட்டுதல்.
- வடிகால் அமைப்புகளை பராமரித்தல்
- இடுகாடுகளைப் பராமரித்தல்.
- தெருக்களை சுத்தம் செய்தல்.
- வரி விதித்தல்.
- பொது கழிப்பிட வசதிகளைப் பராமரித்தல்.

**4. உள்ளாட்சி அமைப்புகளின் விருப்பப்பணிகள் யாவை?**

- தெரு விளக்குளைப் பராமரித்தல்.
- சந்தைகளையும், திருவிழாக்களையும் நடத்துதல்.
- மரம் நடுதல்.
- விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்.
- வண்டிகள் நிறுத்தப்படும் இடங்களில் உள்ள வாகனங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் கால்நடைகளின் கொட்டகை ஆகியவற்றைப் பராமரித்தல்.
- பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களை கட்டுப்படுத்துதல்.

**5. மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் யார்?**

பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்கள் தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை?**

- பேரூராட்சி – 10,000 அதிகமான மக்கள் வாழும் பகுதி.
- நகராட்சி – ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் வாழும் பகுதி.
- மாநகராட்சி – பல லட்சம் மக்கள் தொகை கொண்ட பெரும் நகரப் பகுதி.

## VI. ஒரு பத்தியில் விடையளி :

**1. 1992ஆம் ஆண்டு 73 மற்றும் 74ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?**

- ✦ ஊராட்சி மற்றும் நகராட்சிகள், உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்களாக செயல்படும்.
- ✦ குடியரசு அமைப்பின் அடிப்படை அலகுகள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய வயதுடையோரைக் கொண்ட கிராம சபைகள் (கிராமங்கள்) மற்றும் பகுதிக் குழுக்கள் (நகராட்சிகள்) ஆகியன.
- ✦ கிராமங்கள் இடையில் காணப்படும் வட்டாரம் / வட்டம் / மண்டலம் மற்றும் மாவட்டஅளவில் ஊராட்சிகள் மூன்றடுக்கு முறையில் செயல்படுகின்றன.
- ✦ இரண்டு மில்லியனுக்கு குறைவான மக்கள் தொகை உடைய சிறு மாநிலங்களில் பஞ் சாயத்துக்கள் இரண்டடுக்கு முறையில் இயங்குகின்றன.
- ✦ நேரடித் தேர்தலின் மூலம் அனைத்து அளவிலும் இடங்கள் நிரப்பப்படுகின்றன.
- ✦ அனைத்து அளவு நிலைகளில் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கான இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.
- ✦ பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் இனத்தவர், பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. எல்லா அளவு நிலைகளிலும் தலைவர்கள் பதவிக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- ✦ ஐந்தாண்டு பதவிக்காலம் மற்றும் பதவிக்காலம் நிறைவடையும் முன்பாகவே தேர்தல்கள் நடத்தப் பெற்று புதிய அரசு அமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும். ஆட்சி கலைக்கப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

**2. உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை?**

- ✦ உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் மற்றும் அதிகாரங்களைப் பற்றிய தெளிவான வரையறையின்மை.
- ✦ நிதி ஒதுக்கீடு மற்றும் தேவைகளில் மதிப்பீடு ஒத்துப் போவதில்லை.
- ✦ உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முக்கிய முடிவுகளில் சாதி, வகுப்பு, சமயம் ஆகிய மூன்றும் முக்கியப் பங்காற்றுகின்றன.
- ✦ மக்களாட்சியின் அடிப்படை நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பொறுப்பற்ற நிலை.

## செயல்பாடு

**1. உன் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதியை சந்தித்து உள்ளாட்சி அமைப்புகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்ற விபரங்களை சேகரி.**

மாணவர் சுய செயல்பாடு.

## கூடுதல் வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. தமிழ்நாடு புதிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வந்த ஆண்டு _______ **விடை: 1994.**
2. வாக்களிக்கத் தகுதியான வயது _______ பூர்த்தியடைய வேண்டும். **விடை: 18.**
3. ஒரு வருடத்தில் _______ முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும். **விடை: நான்கு.**
4. இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது எனக் கூறியவர் _______. விடை: காந்தியடிகள்.
5. காந்தியின் சுய ராஜ்ய கிராமம் _______ இருக்க வேண்டும். **விடை: சுயசார்புடையதாக.**
6. 1919 இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் முறையினை செயல்படுத்தியவர் _______. விடை: பெரியார் ஈ.வே. இராமசாமி.
7. 1917 இல் ஈரோடு நகராட்சித் தலைவர் _______. **விடை: ஈ.வே. இராமசாமி.**
8. தமிழ் நாட்டில் _______ மாநகராட்சிகள் உள்ளன. **விடை: 12.**
9. சென்னை மாநகராட்சி கட்டிடத்தின் பெயர் _______ ஆகும். **விடை: ரிப்பன் கட்டிடம்.**
10. 1882 இல் உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்தவர் _______. **விடை: ரிப்பன் பிரபு.**
11. 1935 இந்திய அரசு சட்டம் மாகாணங்களில் _______ அறிமுகப்படுத்தியது. விடை: தன்னாட்சியை.

### II. பொருத்துக :

1.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனவரி 26 | - | அ. காந்தி பிறந்த தினம் |
| 2. | மே 1 | - | ஆ. சுதந்திர தினம் |
| 3. | ஆகஸ்ட் 15 | - | இ. குடியரசு தினம் |
| 4. | அக்டோபர் 2 | - | ஈ. உழைப்பாளர் தினம் |

**விடை: 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ.**

**மேற்கூறிய நான்கு தேதிகளிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும்.**

2.

| | | |
|---|---|---|
| 1. பல்வந்த்ராய் மேத்தா குழு | - | அ. 1986 |
| 2. அசோக் மேத்தா குழு | - | ஆ. 1985 |
| 3. ஜி.வி.கே. ராவ் குழு | - | இ. 1957 |
| 4. எல்.எம். சிங்வி குழு | - | ஈ. 1977-78 |
| 5. மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் | - | உ. 1952 |
| 6. உள்ளூர் நிர்வாக சீர்திருத்தம் | - | ஊ. 1953 |
| 7. மதராஸ் பஞ்சாயத்து சட்டம், மதராஸ் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் | - | எ. 1950 |

8. சமூக அபிவிருத்தி சட்டம் - ஏ. 1957
9. தேசிய நீடிப்பு சேவை - ஒ. 1958

**விடை: 1- இ, 2-ஈ, 3-ஆ, 4-அ, 5-எ, 6-ஏ, 7-ஒ, 8-உ, 9-ஊ.**

## III. குறுகிய விடையளி :

**1. மாநகராட்சித் தலைவரின் (மேயர்) முக்கிய பணிகள் யாவை?**

- அரசுக்கும், மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக செயல்படுகின்றனர்.
- மாநகராட்சிக் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றனர்.
- வெளிநாட்டுப் பிரமுகர்களை வரவேற்று உபசரிப்பார்.

**2. குடிசை வீடுகள் இல்லாத கிராமம் எது?**

ஓடந்துறை கிராமம் குடிசை வீடுகள் இல்லாத கிராமமாகும்.

**3. ஓடந்துறை கிராமம் – குறிப்பு வரைக.**

- தடையில்லா நீர் விநியோகம்.
- தரமான சாலை வசதி.
- மின்சாரம் தயாரிக்கப்பட்டு 2.5 லட்சம் யூனிட் போக மீதமுள்ள மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கப்படுகிறது.
- சூரிய ஒளியினால் இயங்கும் தெரு விளக்குகள்.
- உயிரி வாயு இணைப்பு அனைத்து வீடுகளுக்கும் தரப்பட்டுள்ளது.

# பாடம் 6 சாலை பாதுகாப்பு

## பயிற்சிகள்

### I. சுருக்கமான விடையளி :

**1. இரு சக்கர வாகனம் ஓட்டும் போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை?**

தலைகவசம் அணிவதால் விபத்து ஏற்படும் பட்சத்தில் தலையில் காயம்பட்டு உயிரிழப்பு ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

**2. சாலை விபத்துக்கானக் காரணிகளை குறிப்பிடுக.**

- கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவது
- மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது
- பிற வாகனங்களை பார்த்து கொண்டே வாகனம் ஓட்டுவது.
- அதிவேகம்
- முறையற்ற ஓட்டுநர் பயிற்சி
- நிறுத்தமில்லா தொலைதூரம் வாகனம் ஓட்டுவது.

**3. சாலை சமிக்ஞையில் எந்த நிறம் "நில்" என்பதை உணர்த்துகிறது?**

சிவப்பு நிறம் நில் என்பதை உணர்த்துகிறது.

**4. சாலை பாதுகாப்பு விதி ஏதேனும் மூன்றை கூறுக.**

- சாலையின் இடது புறம் வாகனத்தை செலுத்த வேண்டும்.
- குறுக்கு சாலையில் வாகனத்தில் வேகத்தை குறைத்தல்
- "U" திருப்பம் இல்லாத இடங்களில் வாகனத்தை திருப்பக் கூடாது.

### II. விரிவான விடையளி :

**1. சாலை விபத்துக்கானக் காரணிகளை விவரி.**

**ஓட்டுனர் :**

அதிவேகம், கண்முடித்தனமாக வாகனத்தை இயக்குதல், சாலை விதிகளை மீறல், களைப்பு, மது அருந்துதல்.

**பாதசாரிகள் :**

கவனக்குறைவு, கல்வியறிவின்மை, தவறான இடங்களில் சாலையைக் கடப்பது.

**பயணிகள் :**

கரம், சிரம் புறம் நீட்டுவது ஓட்டுனநரிடம் பேசுவது, தவறான வழியில் வாகனத்தில் ஏறுவது இறங்குவது, படியில் பயணம், ஓடும் வண்டியில் ஏறுவது.

**வாகனங்கள் :**

வாகனம் கட்டுபாட்டை இழப்பது, டயர் வெடிப்பது, குறைவான வெளிச்சம், அதிக சுமை ஏற்றுவது.

**சாலையின் நிலை :**

குழிகள், சேதமடைந்த சாலை, சட்டத்துக்கு புறம்பான வேகத்தடைகள்

**வானிலை**

மூடுபனி, பனி, கனமழை, புயல், ஆலங்கட்டி மழை.

**2 சாலை விபத்துக்கானக் காரணிகளை விவரி.**

- இந்தியாவில் சாலைப் போக்குவரத்துச் சட்டம் ஜீலை 1, 1989ல் ஏற்படுத்தபட்டது,
- சாலை போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசிகள் மூலம் 103 ஐ தொடர்பு கொள்ளலாம்,
- தியணைப்பு வாகனம், அவசர ஊர்தி மற்றும் நோயாளர் வண்டி போன்றவைகளுக்கு வாகன ஓட்டுனர்கள் தடையின்றி வழிவிடுதல் வேண்டும்,
- வலது / இடது புறம் திரும்பும் போது சைகை காட்ட வேண்டும்.

## செயல்பாடு

**1. சாலைபாதுகாப்பு விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள்.**

- குழந்தைகளுக்கு மிக முக்கியமான ஏதேனும் ஒன்றைக் கற்பிக்கும் முறைகளில் ஒன்று விளையாட்டு. இங்கே தரப்பட்டுள்ள சில சாலைப்பாதுகாப்பு செயல்பாடுகள் குழந்தைகள் சாலை பாதுகாப்புப் பற்றிக் கற்க உதவும்.
- வளர்ந்த குழந்தைகள் கற்க குறுக்கெழுத்து ஒரு சிறந்த முறையாகும். குழந்தைகளுக்கான சாலைபாதுகாப்பு கல்வி குறுக்கெழுத்துப் போட்டியை இணையத்தில் காணலாம்.
- யூகிக்கும் விளையாட்டை விளையாடு சாலையில் கேட்கும் சத்தம் எது தொடர்பானது எனக்கேட்டு விளையாடுவது.
- சிவப்பு விளக்கு, பச்சைவிளக்கு: குழந்தைகளை ஓடவிட்டு யாராவது சிவப்பு விளக்கு என செல்லக் குழந்தைகள் ஓடுவதை நிறுத்த வேண்டும். பச்சைவிளக்கு எனச் சொல்லும் வரை அவர்கள் ஓடக்கூடாது.

# கூடுதல் வினாக்கள்

## I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. உலகின் மிக மோசமான சாலை விபத்துகளைக் கொண்ட நாடு ________.

**விடை: இந்தியா.**

2. ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்தில் ________ மில்லியன் பேர் இறக்கிறார்கள்.

**விடை: 1.2 மில்லியன்.**

3. ________ பயன்படுத்துவதன் மூலம் சாலை விபத்தினால் ஏற்படும் இறப்பை 51% தடுக்கலாம்.

**விடை: இருக்கைப்பட்டை.**

## II. பொருத்துக (விடையுடன்) :

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவப்பு விளக்கு | – | நில் |
| 2. | பச்சை விளக்கு | – | செல் |
| 3. | மஞ்சள் விளக்கு | – | கவனி |

## III. குறுகிய விடையளி :

**1. சாலை விபத்தின் நேரடி விளைவுகள் யாவை?**

- மரணம்
- காயம்
- பொருட்சேதம்

**2. சாலை விபத்தை தடுக்கும் முறைகள் யாவை?**


- சாலை விபத்தைப் பற்றிய கல்வியறிவு மற்றும் விழிப்புணர்வு.
- சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துதல்.
- வாகன வடிவமைப்பு மற்றும் சாலை கட்டமைப்பு.

**3. குழந்தைகளுக்கான சாலை பாதுகாப்பு விதிகள் யாவை?**

- சாலை பாதுகாப்புக் குறிகளைத் தெரிந்து கொள்!
- நில்! கவனி! செல்!
- கவனி – கேள்!
- சாலையில் ஓடாதீர்!
- எப்போதும் சாலையோரத்தைப் பயன்படுத்துவீர்!
- வாகனத்தின் வெளியே கையை நீட்டாதீர்!
- வளைவில் சாலையைக் கடக்காதீர்!
- அவசரப்படாதீர்!

## IV. விரிவான விடையளி :

1. பாலினம் மற்றும் வயதுக் குழுவின் அடிப்படையில் உலகளவில் சாலை விபத்தில் உயிரிழந்தோர், 2002 இறப்புகளின் எண்ணிக்கை (ஆயிரத்தில்).




**ஆதாரம்:** உலகசுகாதார நிறுவனம் (2002)

அ. எந்த வயதுக் குழுவைச் சார்ந்தோர் உலகளவில் சாலை விபத்தில் இறப்போரில் அதிக அளவில் உள்ளனர்? ஏன்?

**ஆண்கள்** : 15–29 வயதை உடையவர்கள் அதிக அளவில் உள்ளனர்.

**பெண்கள்** : 30–44 வயதை உடையவர்கள் அதிக அளவில் உள்ளனர்.

**ஆண்கள்**

விடலை மற்றும் இளம் பருவத்தினர் அதிக வேகமாக வாகனம் ஓட்டிச் செல்வது மற்றும் கவனச்சிதைவு.

**பெண்கள்**


வேலைப்பளு மற்றும் மன அழுத்தத்தினால் ஏற்படும் கவனக்குறைவு.

ஆ. சாலை விபத்தில் இறப்போரின் எண்ணிக்கையில் இருபாலரிடையே காணப்படும் மிகப்பெரிய இடைவெளிக்கு சில விளக்கம் தருக.

- அதிகமான எண்ணிக்கையில் ஆண்கள் வாகனம் ஓட்டிச் செல்வதால்.
- மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால்.
- வண்டியில் அதிகமான பொருட்களை ஏற்றிச் செல்வதால்.
- கவனக்குறைவு அதிகமாக இருப்பதால்.

ஆண், பெண் இறப்போர் எண்ணிக்கையில் ஏற்படும் மிகப்பெரிய இடைவெளிக்குக் காரணம் ஆகும்.

**2. 2016 இல் சாலைப் பயன்பாட்டு வகைகளால் இறந்தோர்.**




1. பாதசாரிகள்
2. மதிவண்டி ஓட்டுபவர்கள்
3. இருசக்கர வாகன ஓட்டிகள்
4. மூன்று சக்கர வாகனங்கள்
5. கார்கள், டாக்சிகள். வேன்கள்
6. லாரிகள்
7. பேருந்துகள்
8. மற்ற மோட்டார் வாகனங்கள்
9. மற்றவர்கள் (மாட்டுவண்டி. கையால் இழுக்கப்படும் வண்டி, மிதிவண்டி வாகன ஓட்டிகள்)

**1. பாதசாரிகள் எவ்வாறு தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்?**

✦ பாதசாரிகள் நடைமேடையில் மட்டுமே நடக்க வேண்டும்.
✦ சாலையில் இடதுபுறமாக மட்டுமே நடக்க வேண்டும்.
✦ வேடிக்கை பார்த்துக் கொண்டே நடக்கக்கூடாது.
✦ கைப்பேசி பேசிக் கொண்டே நடக்கக்கூடாது.
✦ தவறான இடங்களில் சாலையை கடக்கக்கூடாது.

**2. எந்த வகை சாலைப் பயன்பாடு மிக அதிக நபர்கள் இறப்பதற்குக் காரணமாகிறது? உங்களால் ஏதாவது மூன்று காரணங்களைக் குறிப்பிட முடியுமா? இதைச் சார்ந்த சாலை விதிகள் என்ன என்பதைக் குறிப்பிட முடியுமா?**

✦ இரு சக்கர வாகன ஓட்டிகளின் கவனக் குறைவு மிக அதிக நபர்கள் இறப்பதற்குக் காரணமாகிறது.
✦ பதினெட்டு வயதிற்கும் குறைவாக உள்ளவர்கள் இரு சக்கர வாகனம் ஓட்டுவதால் விபத்துகள் ஏற்படுகின்றன.
✦ மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் மற்றும் கைப்பேசி பேசிவிட்டு வாகனம் ஓட்டுவதாலும் சாலை விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன.

**இதைச் சார்ந்த சாலை விதிகள்:**

✦ ஓட்டுநர், தன்னுடைய வாகனத்தைச் சாலையின் இடது புறத்தில் எவ்வளவு நெருக்கமாகச் செலுத்த முடியுமோ அவ்வாறு செலுத்துவதுடன், தனக்கு எதிர்புறமாக வரும் வாகனத்துக்கு, வலது புறமாக கடந்து செல்ல போதிய இடம் விட வேண்டும்.
✦ மற்றொரு வாகனம் முந்திச் செல்லும்போது தன் வாகனத்தின் வேகத்தை அதிகரித்தல் (அ) மற்றவர் தன்னைக் கடந்து செல்வதைத் தடுக்கும் வகையில் எதையும் செய்யக்கூடாது.



www.nammakalvi.in